# கடவுள் பற்றி கலைஞரின் நிலைப்பாடு – ஓர் ஆய்வு

***முனைவர் முருகு தயாநிதி***
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை
தேசிய கல்வி நிறுவகம், இலங்கை

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5034

***ஆய்வுச் சுருக்கம்***

*கடவுள் பற்றி கலைஞரின் நிலைப்பாடு – ஓர் ஆய்வு எனும் ஆய்வுக்கட்டுரை, திருக்குறளின் முதல் அதிகாரமான கடவுள் வாழ்த்துக்கு கலைஞர் மு.கருணாநிதி எழுதிய உரையினை அடிப்படையாகக்கொண்டு இக்கட்டுரை வரையப்படுகின்றது. கடவுள், ஆண்டவன், இறைவன் என்ற வகையில் பொது வாக அமையும் சொற்கள் உலகை வெல்லும் சொற்களாகும். இந்தச் சொற்கள் சமயபேதங்களுக்கு அப்பால் நின்றாலும், இந்து சமயத்தினைப் பின்பற்றும் மக்களால் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத்தில், ஆதிபகவன், இறைவன் எனும் சொற்களுக்கு முதன்மை கொடுத்து, அதனை உயர்ந்த பொருளாக் காண்கின்றார். ஆனால், அவர் உருவம் கொடுக்காமல், அதன் இயல்பினைச் சொல்லி, தன்னை இவ்வாறானவர் என்று உலகம் அடையாளப்படுத்தமுடியாதபடி, 133 அதிகாரங்களையும் வடிவமைத்துள்ளார். அதாவது, திட்டமிட்டு திருக்குறளினைப் பக்கச் சார்பின்றி மனிதநேயத்துடன் தந்திருப்பது அவருடைய உயர்ந்த நோக்கினை அடையாளப்படுத்தகின்றது. எனினும், திருக்குறளில் ஆதிபகவன், இறைவன் என்று குறிப்பிட்டு, இறைவனின் இயல்புகளை வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவழி அந்தணன், எண்குணத்தான் என்று குறிப்பிடுவதோடு, இறைவனை இருப்புநிலை, இயக்கநிலை, இயல்புநிலை என்ற தன்மையில் நோக்குகின்றார். எனவேதான், வள்ளுவம் கடவுள் பற்றிய சிந்தனையினை முன்வைத்தபோதும் அதனை இன்ன மதத்திற்குரிய கடவுள் என்ற வகையில் அடையாளப்படுத்த விரும்பவில்லை. ஆனால், அவர் கையாண்டுள்ள சொற்கள் இந்துசமய வாழ்வியலில் மேலோங்கி நிற்கின்றன என்பதனைப் கண்டுகொள்ள முடிகின்றது. எனவேதான், கலைஞரும் கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத் தலைப்பை வழிபாடு எனக் குறித்து, வள்ளுவரைக் கடவுள் மறுப்பாளர் அல்லது கடவுள் நம்பிக்கையாளர் என்ற தன்மைக்குள் உள்வாங்காமல், குறட்பாக்களுக்கு விளக்கம் தந்துள்ளார்.*

## முன்னுரை

காலத்தால் வரையறுக்கமுடியாத இந்து தந்துவமரபு, சிந்துவெளிக் காலமிருந்து ஊற்றெடுத்தது என்றும் அதன் காலம் இற்றைக்கு கி.மு.5000 நூற்றாண்டுகளுக்கு முன்னர் என்றும் ஆய்வறிஞர் சிலர் தங்கள் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

எனினும், இறைக்கொள்கையின் உயர்ந்த தன்மையினை வரையறுக்கமுடியாது. எனினும், இதிகாசங்களிலும் புராணங்களிலும், வேதங்களிலும் அக்கொள்கை வெளிப்படுகின்றது. வேதம் 33 இயற்கைத் தெய்வங்களை மண், விண், இடை உலகங்களுக்கு வரையறுக்கின்றது. இதனை வேதங்களின் சாரமாகிய உபநிடதம் பிரம்மத்தை நிற்குணப் பிரம்மம், சகுணப் பிரம்மம் என்று குறிப்பிடுகின்றது. வேதாந்தம் தெளிவாம் சித்தாந்தம் என்பவற்றிற்கு ஏற்ப சைவசித்தாந்தம் பதிப்பொருளாக இறைவனைக் காட்டுகின்றது. இங்கும் பதியினைச் சொரூப இலக்கணமாகவும், தடத்த இலக்கணமாகவும் அடையாளப்படுத்துகின்றது. இவ்வாறு இந்து சமய நடைமுறையில் சைவம், வைணவம், சாத்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என ஆறுவகைச் சமயப்பிரிவுகள் உள்ளன. அவை அனைத்தும் சைவநெறிக்குள் உள்வாங்கப்படுகின்றன. இவ்வாறாக மேலாண்மை பெற்ற இறைத் கொள்கையினை திருவள்ளுவர் 133 அதிகாரங்களில், முதல் அதிகாரமான கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத்தில் முன்வைக்கின்றார். வள்ளுவப் பெருந்தகை இங்கு கடவுள் என்பவருக்கான அடையாளம் இது? இந்தச் சமயத்திற்குரிய கடவுள் இவர்? என்ற தன்மையில் எந்தவொரு அடையாளத்தினையும் அவர் அடையாளப்படுத்த விரும்பவில்லை என்று ஆய்வாளர் சிலர் முன்வைக்கின்றனர். வள்ளுவர், ஒவ்வாரு சொற்களையும் மிகக் கவனமாகக் கையாண்டு உலகச் சமரச நிலையினை ஏற்படுத்த முயன்றுள்ளார் என்பதுபோல் தெரிகின்றது. இவ்வாறான பின்னணியில்தான் பொதுமறை என்ற சொல்கூட திருக்குறளுக்கு உரித்துடையதாக அமைந்துள்ளது. இதைந்தான் கலைஞர், கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத்தை வழிபாடு எனக் குறித்துள்ளேன் என்றும், நான் வள்ளுவரைக் கடவுள் மறுப்பாளர் அல்லது கடவுள் நம்பிக்கையாளர் எனும் வாத்திற்குள் சிக்கவைக்க விரும்பவில்லை. வழிபாடு எனும் அதிகாரத்தில் அமைந்துள்ள குறட்பாக்களுக்கு நான் எழுதியுள்ள உரைகளைக் கொண்டு இதனை உணரலாம் என்று தனது முன்னுரையிலே குறிப்பிடுகின்றார். எனினும் திருவள்ளுவரையும் கலைஞருடைய உரையினையும் அவதானிக்குமிடத்து, வள்ளுவர் கடவுள் நம்டபிக்கை உடைய ஒருவராகத் தான் இருந்துள்ளார் என்பதனையும் அவருடைய மனிதநேயம் பற்றிய நம்பிக்கைகள் கடவுள் சார்ந்தும் அறம் சார்ந்தும் இருந்துள்ளதோடு, அவர் முன்வைக்கும் கடவுள் பற்றிய இயல்புகள் இந்துசமய கடவுள் கோட்பாட்டை முன்னிலைப்படுத்துவதாகவே அமையப்பெறுகின்றது.

## ஆதிபகவன்

ஒவ்வொரு மதத்தினரும் கடவுள் பற்றியும் அதற்கான கோட்பாடு பற்றியும் தங்கள் கருத்துக்களை முன்வைக்கின்றனர். இந்திய தத்துவஞான மரபில் கடவுள் உள்ள பொருள் என்று வாதிடுபவர்களும், கடவுள் மறுப்பாளர்களும் இருக்கவே செய்கின்றனர். திருக்குறள் ஆராய்ச்சியினை மேற்கொண்ட பௌத்த மதத்தினர், சமண மதத்தினர், கிறிஸ்தவ மதத்தினர், இசுலாமிய மதத்தினர் தங்கள் மதக்கோட்பாடு சார்பாக திருக்குறளை முன்கொண்டு செல்கின்ற தன்மையினையும் அவதானிக்க முடிகின்றது. அவர்கள் முன்வைக்கும் இறையியலுடன் இணைந்த வாழ்வியல் முறை இந்து சமய மரபிலே வையகத்தில் வாழ்வாங்கு வாழும் முறையினால் மேன்மை பெறுவதனை முனைவர் க.அப்பாத்துரையார் குறிப்பிடுவார். திருக்குறளில் கடவுளைக் குறிப்பதாக ஆதிபகவன், இறைவன் என்ற சொற்கள் கையாளப்பட்டுள்ளன. ஆதிபகவன் என்ற சொல் தொழத்தக்க என்றுமுள்ள பொருள் என்ற வகையில் பொருள்கொள்கின்றது. இதனை ஜீ.யு.போப் The Eternal Adoratle One என்று குறிப்பிடுகின்றார். இறை என்ற சொல் தலைவன் என்று நிற்கின்றது.

இதனை உபநிடதம் பிரம்மம் என்கின்றது. சங்கரர் உலகப் படைப்பு பிரமத்தாலே நிகழ்கின்றது என்றும். உலகமும், ஆன்மாவும் அதன் தோற்றம் என்றார். இத்தகைய இறையின் பெருமையினை சைவசித்தாந்தம் பதி என்கின்றது. இந்தப் பதி சொரூப இலக்கணமாகவும், தடத்த இலக்கணமாகவும் எங்கும் பரவி இருக்கின்றது. அது தூணிலும் இருக்கும் துரும்பிலும் இருக்கும் என்பது போலாகின்றது. எமது கண்ணுக்குத் தெரியாமல் எம்மை இயக்கும் சக்தியாக, எம்மையும் உலகையும் இயக்குகின்றது. ஆகவே தான், இறுத்தல் என்பது எங்கும் இருத்தல், கசடு நீங்கும்படி வட்டித்தல், வரி பிரித்தல் எனும் மூன்று பொருட்களை உடையது என்கின்றார் முனைவர் க.அப்பாத்துரையார். இறை என்பதற்கு அரசன் என்று பொருள் கொள்ளுமானால், அரசன் எங்கும் தனது ஆற்றலைப் பரப்பி இருத்தலையும், எல்லாவற்றையும் ஆணையால் இயக்குதலையும், எல்லாரிடமுமிருந்து இறை (வரி) பிரித்தலையும் குறிக்கும் என்பர்.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு (குறள்.1)**

எனவே, அகரம் எழுத்துக்களுக்கு முதன், ஆதிபகவன் உலகில் வாழும் உயிர்களுக்கு முதன்மை என்று கலைஞர் குறிப்பிடுகின்றார். இங்கு முதன்மை என்பதனால் எழுத்தும் அதற்கு நிகராக ஆதிபகவனும் முன்னிலைப்படுத்தப்படுகின்றனர். எவ்வாறு பொதுவாக் கூறப்படுகின்ற போதும் ஆதிபகவன் என்ற சொல் இந்துசமய பண்பாட்டுத் தளத்திலே பேசுபொருளாக உள்ளது. ஆதி என்பதும் முதன்மையானது என்பதோடு, மணிவாசகர் இறைவனை, ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி என்று குறிப்பிடுகின்றார். பகவான் என்பது கூட வைணவர்கள் கூறுவது போன்று விஷ்ணுவைச் சுட்டி வரவில்லை என்பர். ஆகவே இருப்பாற்றலாகிய மெய்ப்பொருள் எல்லாத் தோற்றங்களுக்கும் இயக்கங்களுக்கும் இம்மூல நிலையாக இருப்பதனால், அதனைச் சிறப்பு மொழியால் மூலமான எல்லையற்ற ஒன்றாக விளக்க பகவன் என்று மொழிந்துள்ளார். எனவே, இக்குறளில் இருப்பாற்றலாகிய தெய்வநிலையினை வள்ளுவர் விளக்கியுள்ளார். ஆனால், கலைஞர் உலகில் வாழும் உயிர்களுக்கு முதன்மையாக இருப்பது ஆதிபகவன் என்பதன் மூலம் இறைக்கொள்கையின் தன்மையினை மறைமுகமாகச் சொல்ல வருகின்றார். காரணம், அவர் திராவிட முன்னேற்றக்கழகத்தின் வழி சமரசத் தன்மையினை நிலைநாட்டும் இயங்கு தளத் தில் இருப்பதனால் இவ்வாறு குறிப்பிட வேண்டி இருக்கின்றது எனலாம்.

### அறிவில் மூத்த பெருந்தகையாளர்

கலைஞர் அறிவில் மூத்த பெருந்தகையாளரை வணங்குவதனால் தான் கற்ற கல்வி பெருமை பெறுகின்றது என்கின்றார். இங்கு சமூகநாட்டத்தினைக் கலைஞர் குறிப்பிடுகின்றார். சமூதாய சீர்திருத்தம் இவ்வாறான செயற்பாடுகளால் நிகழ வாய்ப்பிருக்கு என்பார் போலும். இங்கு உயிரை அறிவது அதன் சிறப்பாற்றலாலே சாத்தியமாகின்றது என்பர். புத்தகப் படிப்பால் இயலாத காரியமாகும். அறிவின களமான உயிரையும் முடிவான மெய்நிலையையும் அந்நிலையுணர்ந்த ஆசான் மூலம் பயிற்சி பெற்று, அறிவைக் கொண்டே உணர்ந்து, இணைந்து பயன்பெற வேண்டு என்பர்.

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்**

தன்னை விட அறிவில் மூத்த பெருந்தகையாளரின் முன்னே வணங்கி நிற்கும் பண்பு இல்லாவிடில் என்னதான் ஒருவர் கற்றிருந்தாலும் அதனால் என்ன பயன்? ஒன்றுமில்லை என்று கலைஞர் குறப்பிடுவார். இங்கு அறிவில் மூத்த பெருந்தகையாளர் என்று குறிப்பிடுவது யாரை குறிப்பிடுகின்றார். இங்கு அறிவின் உயர்ந்த தன்மையில்

இருப்பது இறை. இறைக்கு அடுத்து கற்றுணர்ந்த ஆசான் உள்ளார். இவர்மூலமே அகநோக்கப் பயிற்சி பெற்று அத்தகைய அறிவைப்பெற்று, அதற்கேற்ப உணர்ந்து நடந்து பயன்பெற வேண்டும். பரிமேலழகர், மெய்யுணர்வினை உடையானது நல்ல தாள்களைத் தொழுவதனாலே கற்றவன் பயனடைகின்றான் என்கின்றார். ஆனால், தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன? என்றும் உரைகள் அமைகின்றன. இங்கு இறைவனை வணங்குதல் என்பது முதன்மைப்படுத்தப்படுகின்றது. எனவே, கலைஞர் அறிவில் மூத்த பெருந்தகையாளர் என்று எல்லா மதத்தினரும் பொதுவாக நோக்கும் தன்மையில் குறிப்பிடுகின்றார்.

**மலர் போன்ற மனம்**

அறிவை முன்வைத்து இருப்பாற்றலையும் இயக்காற்றலையும் அடையாளப்படுத்து கின்றார். மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார், எல்லா உலகிற்கும் மேலாய வீட்டு உலகின் கண் அழிவின்றி வாழ்வார். என்று பரிமேலழகர் குறிப்பிடுவார். இங்கு மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தவர்கள் எனும்போது, அது இறைவனைச் சுட்டுகின்றது என்பது தெளிவாகின்றது. அவ்வாறான தன்மையில் வாழ்வை முன்னோக்கும் உயிர் நிலையான இன்பவாழ்வைப் பெறுகின்றது. எனவே, சைவ சித்தாந்தம் குறிப்பிடுவது போன்று உயிர், இறைவனுடன் அத்துவிதமாய்க் கலப்பதற்கு இல்லாழ்வு சிறப்புடையதாக இருக்க வேண்டும் என்கின்றது. இந்த உலக்கில் நீண்ட வாழ்வுடன் சிறப்பாக வாழ வேண்டுமாக இருந்தால் இறைவனையே துதித்து அறவழியில் ஒழுக வேண்டும். அவன் பாதங்களையே சரணடைய வேண்டும் என்று சித்தாந்தம் முன்வைக்கின்றது. இல்லற வாழ்வுக்கு இந்து சமயம் முக்கியத்துவம் கொடுக்கின்றது. அதனைச் சிறப்பாக கடக்கும்போதுதான் அடுத்த நிலையாகிய வானப்பிரஷித்த நிலையினை எட்டமுடியும் எனவே வேறு எந்த மதங்களும் சொல்லாத இல்லறவாழ்வு இறை இன்பத்தால் மேன்மையடைகின்றது.

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்**

மலர் போன்ற மனத்தில் நிறைந்தவனைப் பின்பற்றுவோரின் புகழ்வாழ்வு, உலகில் நெடுங்காலம் நிலைத்து நிற்கும் என்று கலைஞர் குறிப்பிடுவார். இங்கு மலர் போன்ற மனத்தினை உடையவன் யார்? என்ற வினா எழுகின்றது. இங்கு இறைவனைக் குறிப்பதற்காக, அவன் குணமான மென்மையினைக் இங்கு முன்வைக்கின்றார். மலர் போன்ற மனத்தில் நிறைந்தவன் இறைவனாகவே காணப்படுகின்றான். வீ.முனிசாமி உரைகாணும் போது, உள்ளக் கமலத்தில், மனத்தில் சென்றிருப்பவனான இறைவனுடைய மாட்சியமைப்பட்ட அடிகளை எப்போதும் நினைப்பவர்கள், உலகில் அழிவின்றி வாழ்வார்கள் என்கின்றார். சுவாமி விபுலாநந்தர் உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது என்றார்.

**விருப்பு, வெறுப்பற்ற நிலை**

விருப்பு, வெறுப்பு இரண்டையும் கடந்தவன் மேன்மைபெறுகின்றான். இந்த இரண்டும் முத்தி நிலையிலே ஒருவருக்குச் சாத்தியமாகின்றது. தன்னலமற்ற தன்மையானது ஒருவனை சிறந்தவழியில் கொண்டு செல்கின்றது. அதற்குச் தியானப் பயிற்சி அவசியமாகும். தியானம் என்பது ஒரு வகையில் ஒரு மனிதனை இறைவழியில் முன்நிறுத்துகின்றது.

**வேண்டுதல் வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல**

விருப்பு வெறுப்பற்றுத் தன்னலமின்றித் திகழ்கின்றவரைப் பின்பற்றி நடப்பவர்களுக்கு

எப்போதுமே துன்பம் ஏற்படுவதில்லை என்று கலைஞர் தனது கருத்தினை முன்வைக்கின்றார். இங்கு ஒருவரைச் சுட்டிக் காட்டி, இவரைப் பின்பற்றி நடந்தால் வாழ்வு சிறப்புறும் என்கின்றார். அந்த விருப்பு வெறுப்பற்ற ஒருவர் இறைவன் என்பதனை இந்துசமய வாழ்வியலில் கண்டுகொள்கின்றோம். இங்கு விருப்பு வெறுப்புடன் தன்னலம் இல்லாத தன்மையினையும் அடையாளப்படுத்துகின்றார்.

## நல்வினை, தீவினை

இந்து சமய நடைமுறையிலே நல்வினை, தீவினை என்ற இரண்டு வினைகள் அமைந்து கிடக்கின்றது. இதில் தீயவினைகள் மயக்கத்தை உண்டு பண்ணி எப்போதும் ஒருவரை இறைவன் பால் சோராமல் வைத்துக்கொள்ளும். இதற்கு ஆணவம் என்பர். ஒருவர் எந்தச் சமயத்திலும் தன்னுடைய சமநிலை ஆளுமையில் இருந்து தவறாமல் நடப்பாராக இருந்தால் அவர் எப்பாதும் சிறந்த ஒருவராகவே இருப்பார். எப்போதும் ஓர் ஆன்மா, கடவுளின் உண்மை என்பதனை உணர்ந்து, அதன் புகழை விரும்பி அன்பு செலுத்தினால், ஆன்மாவுக்கு அறியாமையால் விளையும் இருவகை வினையும் சேரமாட்டாது. இதனைக் கலைஞர், இறைவன் என்பதற்குரிய பொருளைப் புரிந்து கொண்டு புகழ் பெற விரும்புகிறவர்கள், நன்மை தீமைகளை ஒரே அளவில் எதிர்கொள்வார்கள் என்கின்றார்.

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு**

இங்கு இறைவனைப் புரிந்து கொண்டு வினையாற்றும்போது, இருவினையொப்பு இடம்பெறுகின்றது. எனவே, திருவள்ளுவரும் கலைஞரும் இறைவன் எனும் முதலினை முன்வைக்கின்றனர். இங்கு கலைஞர் ஒவ்வொரு குறளிலும் மனிதனுடன் இணைந்த வகையில் தனது கருத்துக்களை முன்வைத்து வந்த போதும், இங்கு இறைவன் என்ற சொல் குறளில் நிற்பதனால் இறைவன் என்ற பொருளைப் புரிந்துகொள்ள வேண்டும் என்கின்றார். ஆகவே, எவ்வாறு சுற்றி வளைத்த போதும் இறைவன் என்ற தன்மையுடன் உடன்படுவதனைக் காணமுடிகின்றது. இங்கு இறைவனை உணர்தல், வினையினைக்களைதல் என்ற சைவசித்தாந்தக் கோட்பாடு இக்குறளில் பொதிந்துள்ளது.

## ஐம்பொறிகள்

ஐம்பொறிகள் எனப்படுவது நமது உடலின் இயக்கத்திற்கு தேவையான மிக முக்கியமான உறுப்புக்களாகும். இவைகள் இயந்திரம் போன்றவையாகும். ஆகவே தான் பொறிகள் என்கின்றோம். வாழ்வு நீண்டு நிலைப்பதற்கு ஐம்பொறிகளின் வழிப் பிறக்கும் தீய ஆசைகளை ஒளிக்க வேண்டும். இவற்றினால்தான் மனிதன் தடம்மாறுகின்றான். இதனைக் கலைஞர், மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்திய தூயவனின் உண்மையான ஒழுக்கமுடைய நெறியைப் பின்பற்றி நிற்பவர்களின் புகழ்வாழ்வு நிலையானதாக அமையும் என்கிறார்.

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்**

ஐம்பொறிகளைக் கட்டுப்படுத்திய தூயவன் என்று இறைவனைப் பொதுப்படப் பார்க்கின்றார். நாம் நற்செயல்களைப் பார்த்து, நற்செய்தியைக் கேட்டு, நல்தகவல்களை மொழிந்து, உண்மையாக மூச்சு காற்று போல் சுவாசித்து வாழ்ந்து வந்தால், சான்றோனாய் நீண்டகாலம் இப்புவிதன்னில் வாழலாம் என்பர்.

## ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன்

இறைவனைப் பற்றி குறிப்பிடும் போது, “ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன்” என்று சொல்வார்கள். அதாவது இறைவனுக்கு

ஒப்பாக ஒருவரை உவமையாக சொல்ல இயலாது. இறைவனை விட பெரியவர் "ஒருவரும் இல்லை". தன் சொரூபத்தாலும் திருமேனியாலும் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாகத் திகழ்கின்றான்.

**சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை**

இறைவன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் என்பதனை திருமந்திரம் காட்டுகின்றது. இதனைக் கலைஞர், ஒப்பாரும் மிக்காருமில்லாதவனுடைய அடியொற்றி நடப்பவர்களைத் தவிர, மற்றவர்களின் மனக்கவலை தீர வழியேதுமில்லை.

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது**

இங்கு சமநிலை ஆளுமை உள்ள ஒருவரைக் கலைஞர் காட்டுவதுபோல் அமைகின்றது. அவ்வாறாயினும் அத்தகைய தன்மை கொண்ட ஒருவர் இறைவனாகத் தான் இருக்க வேண்டும் என்பதனை அப்பரும் அம்மையும் நீ அப்பனும் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ என்று தனது தேவாரப் பாடலில் குறிப்பிடுகின்றார். எவ்வாறாயினும், தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைச் சேர்ந்தவர்க்கே அன்றி, மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது போகின்றது. எனவே, தனக்குவமை இல்லாத ஒருவன் இந்த உலகிற்கே வழிகாட்டுவான். அவன் தான் இறைவனாக இருப்பான் என்பது உணரப்படுகின்றது.

## அறக்கடல்

அறநெறியின் கண் உலகம் இயங்குகின்றது. இல்லறவாழ்வை நல்லறமாகக் கழிப்பதனால் இங்கே எல்லா நற்பயன்கயும் அடையமுடிகின்றது. ஒருவன் இல்லறத்தில், அதற்குரிய அறநெறிப்படி வாழ்வானாகில் அவன் இந்த உலகத்திலே பெறுவதற்கு வேறு பயன் ஒன்றும் இருக்கமுடியாது என்பர். உலகை வாழவைக்கும் அறவழியின் பயனை இல்லறத்தில் அடைவதற்கு நீண்டகாலம் பொறுமையாக ஆற்ற வேண்டும். அக்கடமைகளை ஆற்றுவது சற்றுக் கடினமானது. மனிதனை மனிதனாக வாழவைக்கும் அறவழி அன்பு, அடக்கம், பொறுமை, நடுவுநிலைமை, ஈகை, விட்டுக்கொடுப்பு முதலான வகையில் அமைகின்றன. இவ்வாறான அறவழியில் யார் எதனையும் பின்பற்றலாம். இவற்றைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் இறுதியில் நற்பயனாகிய வீடுபோற்றினை அடைவர். அந்த இடம் நிச்சயம் இறைவன் வீற்றிருக்கும் இடமாகத்தான் இருக்கும். இங்கு அந்தணன் என்பவன் அறவழியைப் பின்பற்றுபவன். இத்தகைய அந்தணன் பிறப்பால் கூறிக்கொள்ளும் அந்தணன் அல்ல. இவன் சிறந்த ஒழுக்கம் உடைய ஒருவன் என்பர். ஆனால் கலைஞர், அந்தணர் என்பதற்குப் பொருள் சான்றோர் என்பதால், அறக்கடலாகவே விளங்கும் அந்தச் சான்றோரின் அடியொற்றி நடப்பவர்க்கேயன்றி, மற்றவர்களுக்குப் பிற துன்பக் கடல்களைக் கடப்பது என்பது எளிதான காரியமல்ல என்பார்.

**அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது**

சான்றோர் என்பது நிறைந்தவர்கள் என்ற பொருளில் நிற்கின்றது. இச்சொல் சால் எனும் அடிச் சொல்லிலிருந்து தோன்றியது. சாலுதல் என்றால் நிறைதல் என்ற பொருளில் வருகின்றது. பொருள் சான்றோர் என்பது அன்பு, அறன், ஒழுக்கம், நன்றியுணர்வு முதலானவற்றை அணியாக் கொண்டவர்கள். இதனைத் நீத்தார் பெருமை எனும் அதிகாரத்தில் மேலும் விளக்குகின்றார்.

**அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்**
***(குறள்.30)***

எல்லா உயிர்களிடத்திலும் குளிர்ந்த அருள் தன்மை பூண்டொழுகுபவர் அந்தணர்;

அறவோர். அந்தணர் பிறப்பால் அன்று; அந்தணர் என்பது சாதிப் பெயரன்று; எல்லா உயிர்களுக்கும் அருள் நலம் செறிந்த தண்ணளியை வழங்கி ஒழுகி வாழ்பவரே அந்தணர் என்று குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுவார். எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால் அறவோரே அந்தணர் எனப்படுகின்றனர். பரிமேலழகர், அந்தணரென்று சொல்லப்படுவார் துறவறத்தில் நின்றவர் என்று குறிப்பிடுகின்றார். இங்கு அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் சேர்ந்தவரே அல்லாமல் மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்ற கடல்களைக் கடக்க முடியாது. அறக்கடலான கடவுளின் திருவடிகளை மற்றவர் பிறவியாக கடலை நீந்திக் கடப்பது கடினம்.

**எண்குணம்**

மெய், வாய், கண், மூக்குச், செவி எனும் ஐம்பொறிகளால் உணர்ந்து இறைவனை வணங்குவது மேலானதாகும். எண்குணம் என்பது தமிழ் உட்பட்ட பண்டை இந்தியத் துணைக்கண்டத்து மரபுகளில் வழங்கும் குணத்தொகுதி என்பர். எண்குணம் என்பதைத் தமிழ்மரபில் கீழ்க்கண்டவாறு காண்கிறோம். அவை அருகனெண்குணம், சிவனெண்குணம் என இரண்டு வகையாக அமைகின்றன. அருகனெண்குணமாக கடையிலாவறிவு, கடையிலாக்காட்சி, கடையிலா வீரியம், கடையிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு அமைகின்றன. சிவனெண்குணத்தினைப் பரிமேலழகர் உரைப்படி தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என அமைகின்றது. பிங்கலந்தை நிகண்டுப்படி பவ மின்மை, இறவின்மை, பற்றின்மை, பெயரின்மை, உவமையின்மை, ஒருவினையின்மை, குறைவிலறிவுடைமை, கோத்திரமின்மை என அமைகின்றன. திருமந்திரம், உயிர்கள் அனுபவிக்க வேண்டிய ஆசைகளையும் வினைகளையும் அடைய வேண்டிய பலவித குணங்களையும் வைத்து இறைவன் அருளுகின்றான் என்கிறது.

> **விடையுடை யான்விகிர் தன்மிகு பூதப்**
> **படையுடை யான்பரி சேஉல காக்குங்**
> **கொடையுடை யான்குணம் எண்குண மாகுஞ்**
> **சடையுடை யாஞ்சிந்தை சார்ந்துநின் றானே**
> **(திருமந்திரம்.444)**

கலைஞரின் உரைப்படி, உடல், கண், காது, மூக்கு, வாய் எனும் ஐம்பொறிகள் இருந்தும், அவைகள் இயங்காவிட்டால் என்ன நிலையோ அதே நிலைதான், ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்டவனை வணங்கி நடக்காதவனின் நிலையும் என்றார்.

> **கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்**
> **தாளை வணங்காத் தலை**

இக்குறளில் எண்குணம் பற்றி அவர் குறிப்பிடவில்லை. பதிலாக ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்டவன் என்கின்றார். இந்த தொடர் இறைவனையே சுட்டுகின்றது. மேற்கூறியது போன்று எண்குணம் என்பது இறைவனுக்கே உரித்துடையதனை பின்னர் சைவசித்தாந்தமும் விளக்கும். ஐம்பொறிகளால் துதித்து, எப்போதும் இறைவனையே வணங்க வேண்டும் என்கின்றார். இறைவனே உலகிற்கு முதன்மை என்பதனை திளிவாகவே காட்ட முனைகின்றார். இதனை அப்பர், நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை என்ற அடியில் நான் நிற்கும் போதும் அமரும் போதும் கிடக்கும் போதும் நடக்கும் போதும் எந்த நிலையில் இருந்தாலும் நினைப்பது உன்னையே என்று பாடுகின்றார். எனவே கலைஞருடைய சிந்தனையின்படி ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்டவன் இறைவன் என்பது புலனாகின்றது.

### பிறவிப் பெருங்கடல்

மனிதப் பிறப்பின் இறுதி இலக்கு வீடுபேறாகும். இதனை அத்துவிதமாய்க் கலந்திருத்தல் என்பர். இறைவனின் திருவடிகளை ஆன்மா அடையும் நிலை இதுவாகும். வீடுபேற்றினைப் பெறுவதற்கு வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டும் என்று குறள் முழுதும் வலியுறுத்துகின்றார். எனவே, ஒருவரது பிறவியினை மற்றும் வாழ்வினை கடலுக்கு ஒப்பிடும் வள்ளுவர், பிறவியாகிய கடலில் நீந்தும்போது இறையின்பத்தினைக் கைவிடக்கூடாது. அந்த இறை இன்பம், கற்பூரப் பக்திபோல் இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் பிறந்து, இறக்கும் பேரவத்தை நீங்கி இறைநிலையினை அடையமுடியும். இந்த இறையின்பம் பற்றிய செல்நெறியினை ஏனைய மதங்கள் துறவின்வழி முதன்மைப்படுத்தினாலும், வையக வாழ்வினைத் தள்ளிவைத்துள்ளது. ஆனால் இந்துசமயம் இவ்வுலக வாழ்வினை ஒருவன் பிரமசரியம், கிருகஸ்தம், வானப் பிரஷ்தம், சன்னியாசம் என்ற வகையில் முறைப்படி கடந்து செல்லும்போது தான் வீடுபேற்றினை அடையமுடியும் என்கின்றது. எனவே, இவ்வுலக வாழ்வு என்பது இறைவனின் பாதாரவிந்தங்களை வணங்கி கடந்து செல்ல வேண்டியது என்பதனைக் கலைஞர், வாழ்க்கை எனும் பெருங்கடலை நீந்திக் கடக்க முனைவோர், தலையானவனாக இருப்பவனின் அடி தொடர்ந்து செல்லாவிடில் நீந்த முடியாமல் தவிக்க நேரிடும் என்றார்.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்**

இங்கு தலையானவனாக இருப்பவன் இறைவன். இவனை உலகிற்கு முதன்மையானவன் என்றும் உலகத் தோற்ற ஒடுக்கத்திற்குக் காரணமானவன் என்றும் இந்துசமய இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இறைவன் என்கின்ற ஒன்றே இந்த உலகத்தினை இயக்குகின்றன. தலையானவனாக இருப்பவனின் அடியினைத் தொழுதே, நமது பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்க வேண்டும் என்கின்றார். இறைவனைப் பற்றிய சிந்தனை இன்றி வாழ்வினைக் கடப்பவர்கள் இறைவன் திருவடிகளச் செரமாட்டார்கள்.

### முடிவு

திருவள்ளுவருடைய குறளுக்குப் பல்வேறு உரைகள் எழுந்துள்ளன. அவை கருத்தினை வலியுறுத்துவதில் ஒரே தன்மை உடையனவாக இருந்த போதும், விடயத்தினை முன்கொண்டு செல்வதில் சிறிய இடைவெளி காணப்படுவது போல் உள்ளன. இந்த வகையில் கலைஞர் கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத்திற்குக் கொடுத்திருக்கும் உரையின்கண்அவதானித்தால்,அவர்தந்தை பெரியாருடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் வழி வந்தவர், அண்ணாவின் அறிவுரையைப் பின்பற்றியவர். இவ்வாறான திராவிட முன்னேற்றக்கழகம் சமரசத்தினை நிலைநாட்டியது. ஆரிய, திராவிட இனங்கள் பற்றிய புரிதல்களால் ஏற்பட்ட தெளிவின்மையால் இறைக்கொள்கையில் இடைவெளி ஏற்பட்டது. ஆரியர்கள் தங்களை மேலானவர்களாகவும், முதன்மையானவர்களாகவும், கடவுளை ஆரியக்கடவுளாகவும் முன்னிலைப்படுத்த முனைந்தனர். இராமனை ஆரியனாக முதன்மைப்படுத்தி, இராவணனை திராவிடனாக பின்தள்ள முயன்றனர். இவ்வாறான ஒரு பின்னணியில் திருக்குறள் கடவுள் வாழ்த்துக்குக் கலைஞர் மு.கருணாநிதி உரை எழுதும்போது, இறைவன் என்பதனை வெளிப்படையாகப் பேசவில்லை என்று தோன்றுகின்றது. ஆனால் இவர் இறை எதிர்ப்பாளரும் அல்லர் என்பதனை அவர் எழுதிய உரையின் வாயிலாக உணரமுடிகின்றது. இவர் ஆதிபகவன், இறைவன் என்ற சொற்களைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் அறிவில் மூத்தவன், மலர் போன்ற மனத்தில் நிறைந்தவன், விருப்பு

வெறுப்பற்றவன், தன்னலமின்றித் திகழ்கின்றவன் என்ற வகையில் சுட்டி, இறைவனை பொதுவடிவிலே காட்டமுனைந்துள்ளார். திருவள்ளுவர் இறைவன் பற்றி என்ன சொன்னார் என்பதற்கு அவர் விளக்கம் தராமலும் முரண்படாமலும் அதனை வாசகர்களின் பக்கம் விடுகின்றார். ஆனால், அவர் இறைவன் எல்லாச் சமயத்தவர்க்கும் பொதுவானவர் என்று உரைதந்தாலும், அவருடைய பொருளின் உட்கிடக்கையின்படி, அதில் வருகின்ற கருத்துக்கள் இந்துசமயத்திற்குரிய தன்மையிலே முன்கொண்டு செல்லப்படுகின்றமையினை கண்டுகொள்ளமுடிகின்றது. இந்தக் குறள்களில் ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இருவினையும் சேரா இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான், இறைவன் என்று இறைவனின் இயல்புகளைச் சுட்டப்படுகின்றன. எனவே, கடவுள் பற்றி கலைஞர் பொதுவான தன்மையில் விளக்கம்தந்தபோதும், அக்கடவுள் பற்றிய உள்ளீடுகள் இந்துசமய வாழ்வியலை விளக்கும் தன்மையுடன் காணப்படுகின்றது என்பது வெளிப்படுகின்றது.

## துணைநூல்கள்

1. இரவீந்திரன், ந. (2009). திருக்குறளில் கல்விச் சிந்தனை சமூகநோக்கில் ஒரு மறுவாசிப்பு, விஞ்சு வெளியீடு, வவுனியா.
2. கௌமாரீஸ்வரி, எஸ். (2002). (பதிப்பாசிரியர்) திருக்குறள் - பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
3. கௌரிராசன், பொன்.(2005). திருக்குறளில் பொதுநிலை உத்திகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
4. சரளா ராஜகோபாலன். (1998). வள்ளுவர் வழிச் சிந்தனைகள், அன்புப் பதிப்பகம். சென்னை.
5. புலியூர்கேசிகள். (1992). திருக்குறள் பரிமேலழகர் உரை, (கருத்துரையுடன்) விசா பப்ளிகேஷன்ஸ், சென்னை.
6. தாமரைச் செல்வி. (2001). திருக்குறள் காட்டும் தமிழர் சமுதாயம், (குடும்பம், அரசு) செயலாம் பதிப்பகம், புதுச்சேரி.
7. திருநாவுக்கரசு, க.த. (19985). திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை.
8. புலவர் குழந்தை. (1964). திருக்குறளும் பரிமேலழகரும், இளங்கோ புத்தகச ாலை, ஈரோடு.
9. நந்தகுமார், சீனி. (வி.தெ). திருக்குறளில் கற்றல் சிந்தனைகள், தஞ்சாவூர் பல்கலைக்கழகம்.